**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 244/2024 (Old CCNo.33/2023) |
| Deposition of witness for | Prosecution : LW8-PW8 |
| | Defence : |
| | Court : |
| Name : துரைமுருகன் | Father's Name : கனகராஜ் |
| | Husband Name: |
| Village: சத்திரம் | Taluk : |
| Caste : | Calling : விவசாயம் |
| Religion: | Age : 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24.10.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சத்திரம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அசா1 கிருஷ்ணமூர்த்தி என்பவர் என்னுடைய பெரியப்பா ஆவார். கடந்த 03.07.2022ம் தேதியன்று காலை 6 மணிக்கு எனது தம்பி ராஜா இரு சக்கர வாகனத்தில் தளவாக்குளம் சந்தைக்கு ஆடு வாங்க சென்ற போது டாடா ACE வாகனம் மோதி அடிப்பட்டு விட்டதாக எனக்கு பரணி என்பவர் தகவல் சொன்னார். நான் சம்பவயிடம் சென்று பார்த்தபோது ராஜாவிற்கு தலையில், வயிற்றில், முட்டியில் இரத்தகாயம் இருந்தது. பின்னர் 108 ஆம்புலென்ஸில் வந்த நபர்கள் என் தம்பியை பரிசோதித்து இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். அதன் பிறகு வேறொரு ஆம்புலென்ஸில் வந்து திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு என் தம்பியின் பிரேதத்தை எடுத்து சென்றது. போலிசார் என்னை மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை :** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 244/2024 (Old CCNo.33/2023) |
| Deposition of witness for | Prosecution : LW9-PW7 |
| | Defence : |
| | Court : |
| Name : பலராமன் | Father's Name : காசி |
| | Husband Name: |
| Village: சத்திரம் கூட்ரோடு | Taluk : |
| Caste : | Calling : விவசாயம் |
| Religion: | Age : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24.10.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சத்திரம் கூட்ரோடு கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அசா1 கிருஷ்ணமூர்த்தி என்பவரை தெரியும். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணமூர்த்தியின் மகன் என்பவருக்கு தளவாக்குளம் சந்தையின் அருகே சாலை விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டார் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது **அசாஆ2** ஆகும். போலிசார் சம்பவ இடமான தளவாக்குளம் சந்தை அருகே பள்ளியின் அருகே வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகசரில் நானும் எனது நண்பர் பத்ராச்சலம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு விபத்தில் இறந்த ராஜா என்பவர் எனக்கு சொந்தகாரர் என்றால் சரியல்ல அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். நான் சம்பவ இடத்தை சென்று பார்த்தபோது அங்கு கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். தளவாக்குளம் கூட்ரோடு அருகில் தான் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால்

சரிதான். நான் இறந்து போனவரின் உறவினர் மற்றும் அவர் என் ஊர்காரர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்